# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 161 | திங்கள் Monday | 07.09.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


## 'மனதளவில் நக்சல்' பற்றி நான் பேசியபிறகு ஒவ்வொருவராக வெளிவருகிறார்கள் பிரதமர் மோடி பேச்சு



புதுடெல்லி: 13 ஆண்டுகளில் இந்தியா கொள்கை முடக்க நிலையிலிருந்து கொள்கையை செயல்படுத்தும் வகையிலான மாற்றத்தை கண்டுள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

டெல்லியில் உள்ள ஸ்ரீராம் வணிகவியல் கல்லூரியின் நூற்றாண்டு கொண்டாட்டத்தில் பங்கேற்று பிரதமர் மோடி பேசினார். முன்னதாக, இதே கல்லூரியில் கடந்த 2013-ல் அவர் பேசியிருந்தது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் மாணவர்கள் மத்தியில் அவர் கூறியதாவது:

"கடந்த 2013-ல் தீவிரவாதம், ஊழல், பணவீக்கம் உள்ளிட்ட கடும் சவால்களை இந்தியா எதிர்கொண்டது. தேசத்தின் வளர்ச்சி என்பது அப்போது வீழ்ச்சியில் இருந்தது. பணவீக்கம் உச்சத்தில் இருந்தது.

ஊழல் மோசடி தேசிய அளவில்புதிய உச்சத்தை எட்டியிருந்தது. தீவிரவாதிகள் அஞ்சாமல் நடமாடினர். எல்லையில் பாகிஸ்தான் அத்துமீறி செயல்பட்டு கொண்டிருந்தது. கொள்கை அளவில் முடங்கிப்போன காலம் அது. பலவீனமான நாடுகளின் பட்டியலில் உலகம் பார்த்தது.

ஆனால், இப்போது பாருங்கள் பாகிஸ்தான் நம் தேசத்தின் தாக்குதல் முயற்சி மேற்கொண்டால் கூட தக்க பதிலடி தருகிறோம். நக்சலிசத்தை அழித்துள்ளோம். தேசத்தின் கொள்கை செயல்பாட்டுக்கு வந்துள்ளதை மக்கள் கண்டு வருகின்றனர்.


நிதியாண்டின் முதல் காலாண்டில் தேசத்தின் ஜிடிபி 7.8 சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளது. மேற்காசிய போர் சூழல் மற்றும் சர்வதேச வணிக சவால்களுக்கு மத்தியில் இந்திய தேசம் இதனை எட்டியுள்ளது.

செங்கோட்டையில் (சுதந்திர தின உரையை குறிப்பிட்டு) 'திமாகி நக்சல்' குறித்து நான் பேசி இருந்தேன். அதை நான் சொன்னதிலிருந்து ஒவ்வொருவராக வெளிவர தொடங்கியுள்ளனர். அவர்கள் மீது நடவடிக்கை எடுப்போம்.

ஜன் தன் யோஜனா திட்டம் கடந்த 12 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்டது. அப்போது தேசத்தின் மக்கள் தொகையில் 50 சதவீத மக்களுக்கு வங்கிக் கணக்கு இல்லை. ஆனால், 2012 முதல் சுமார் 60 கோடி வங்கிக் கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளன. இந்தியா 2014-ல் ஸ்மார்ட்போன்களை இறக்குமதி செய்து வந்தது. இப்போது நாம் போன்களை தயாரித்து, சுமார் 2.5 கோடி ரூபாய் மதிப்பிலான போன்களை ஏற்றுமதி செய்துள்ளோம்.

இன்றைய இளைஞர்கள் ஸ்டார்ட்-அப் முயற்சி குறித்து சிந்திக்கவும், அதை செயல்படுத்தவும் முடிகிறது. கடந்த 13 ஆண்டுகளுக்கு முன்னர் அன்றைய இளம் தலைமுறையினருக்கு இந்த வாய்ப்பு இல்லை என்றார். இந்த நிகழ்வுக்கு மெட்ரோ ரயிலில் பிரதமர் மோடி வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கல்லணையிலிருந்து காவிரி நீர் திறப்பு டெல்டா மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி



தஞ்சாவூர்: காவிரி டெல்டா மாவட்டங்களின் சம்பா,தாளடி சாகுபடிக்கு தேவையான தண்ணீர் இன்று காலை கல்லணையிலிருந்து திறந்து வைக்கப்பட்டது. இது டெல்டா மாவட்ட விவசாயிகள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. காவிரி டெல்டா மாவட்டங்களில் குறுவை, சம்பா, தாளடி என மூன்று போகம் நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இந்த சாகுபடிக்கு தேவையான தண்ணீர் மேட்டூர் அணையிலிருந்து காவிரியில் திறந்துவிடப்படும். இதற்காக மேட்டூர் அணையில் ஜூன் 12-ம் தேதி தண்ணீர் திறந்து விடப்படுவது வழக்கம்.

ஆனால், இந்தாண்டு மேட்டூர் அணையில் போதிய தண்ணீர் இல்லாத காரணத்தால், ஜூன் 12-ம் தேதி தண்ணீர் திறக்கப்படவில்லை.

இதையடுத்து மேட்டூர் அணைக்கு நீர் வரத்து 90 அடியாகஉயர்ந்தநிலையில், அணையிலிருந்து தண்ணீரை திறக்க விவசாயிகள் விடுத்த கோரிக்கையை ஏற்று செப்.1 ம் தேதி தமிழக முதல்வர் விஜய் மேட்டூர் அணைக்கு வந்து தண்ணீரை திறந்து விட்டார்.

தொடக்கத்தில் 3 ஆயிரம்கனஅடிதிறக்கப்பட்டு, படிப்படியாக 7 ஆயிரம் கன அடியாக உயர்த்தப்பட்டது.மேட்டூர் அணையில் திறக்கப்பட்ட தண்ணீர் 205 கிலோ மீட்டர் பயணித்து தஞ்சாவூர் மாவட்ட எல்லையான கல்லணைக்கு நேற்று மாலை வந்தது. இதையடுத்து கல்லணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறக்க முடிவு செய்யப்பட்டது. நலத்துறை அமைச்சர் ஆர். வினோத், சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் ஏ.எம்.ஷாஜகான், டெல்டா மாவட்டங்களின் ஆட்சியர்கள், நீர்வளத்துறை மற்றும் வேளாண்மை துறை அதிகாரிகள், விவசாயிகள் கல்லணையில் உள்ள சுற்றுலா மாளிகையிலிருந்து மேளதாளத்தோடு ஊர்வலமாகப் புறப்பட்டு, காவிரி வெண்ணாறு, கல்லணைக் கால்வாய், கொள்ளிடம் ஆகிய ஆறுகளில் தண்ணீரை திறந்து வைத்தனர். அப்போது நவதானியங்கள், பூக்கள் ஆகியவற்றை தூவி விவசாயம் செழிக்க வேண்டிகொண்டனர்.

முன்னதாக கல்லணையில் உள்ள காவிரி, வெண்ணாறு, கல்லணைக் கால்வாய், கொள்ளிடம் ஆகிய ஆறுகளில் உள்ள ஷட்டர்கள் சீரமைக்கப்பட்டு, வர்ணம் பூசப்பட்டது. மேலும், கரிகால்சோழன் சிலை, மாமன்னன் ராஜராஜசோழன் சிலை, அகத்தியர் சிலை, காவிரி தாய் சிலை, சர் ஆர்தர் காட்டன் சிலை ஆகியவை வர்ணம் பூசப்பட்டிருந்தன. முதலில் காவிரி, வெண்ணாற்றில் தலா 1,000 கன அடியும், கல்லணைக் கால்வாய், கொள்ளிடத்தில் தலா 500 கன அடியும் வினாடிக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. தொடர்ந்து படிப்படியாக தண்ணீர் திறக்கப்படும் அளவு உயர்த்தப்படும். இந்த தண்ணீர் திறப்பின் மூலம் காவிரி டெல்டா மாவட்டங்களில் சம்பா, தாளடி சாகுபடி செய்யப்படவுள்ளது.

## 'மக்கள்தொகை கணக்கெடுப்பில் ஓபிசி சாதிகளின் பட்டியல் இடம்பெற வேண்டும்' தி.மு.க. தலைவர் ஸ்டாலின் வலியுறுத்தல்



சென்னை: 'குளறுபடிகளுக்கு இடம் தராமல் சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். ஓபிசி மக்களின் உரிமையைக் காப்பாற்றச் சட்டப்பேரவையில் தீர்மானம் இயற்ற வேண்டும்' என திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், 'தற்போது எடுக்கப்பட்டு வரும் மக்கள் தொகை கணக்கெடுப்பில் இதர பிற்படுத்தப்பட்ட பிரிவைச் சேர்ந்தோரைக் கணக்கிட 'open-ended format to record caste details without a pre-determined drop-down list or standardized menu' முறையை ஒன்றிய அரசு பயன்படுத்தும் என்று வெளியாகியுள்ள அறிவிப்பு ஏமாற்றம் அளிக்கிறது. ஓபிசி பட்டியலில் இடம்பெற்றுள்ளவை வகுப்புகள்தானே தவிர, அவை சாதிகள் அல்ல என்று ஒன்றிய அரசு தரப்பில் தரப்பட்டுள்ள விளக்கம் ஏற்புடையது அல்ல.

மாநில அரசுகளுடன் கலந்தாலோசித்து, ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பிரிவில் இடம்பெற்றுள்ள சாதிகளின் பட்டியலைப் பெற்று, தொகுத்து, பதிவேற்றி, அதில் இடம்பெற்றுள்ள சாதிகளில் ஒன்றைத் தெரிவு செய்யும் வாய்ப்பை மக்களுக்கு வழங்கும் வழிமுறையே குழப்பங்களுக்கு இடம் தராது. மாறாக, பொதுமக்கள் கூறும் சாதியின் பெயரைப் பதிவேற்றுவது குழப்பங்களுக்கே வழிவகுக்கும்.

இதனால் இந்தியாவில் 46 லட்சம் சாதிகள் இருப்பதாகக் குளறுபடியான கணக்கு வரும் என்ற ஆபத்தைச் சமூகநீதியில் அக்கறைகொண்ட பலரும் சுட்டிக்காட்டுவதை அரசு புறந்தள்ளிவிடக் கூடாது.

சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் நோக்கமே பட்டியலினச் சமூக மக்களின் எண்ணிக்கையைப் போல, ஓபிசி மக்களின் உண்மையான எண்ணிக்கையையும் அவர்களது கல்வி, சமுதாய, பொருளாதார நிலைமையையும் அறிந்துகொள்வதுதான்.

அப்போதுதான் அவர்கள் அதிகாரம் பெறுவதற்கான இடஒதுக்கீட்டுக் கொள்கைகளை வகுக்கவும், அவர்தம் முன்னேற்றத்துக்குத் தேவையான திட்டங்களைத் தீட்டவும் அரசுகளால் இயலும்.

அப்படி இருக்கையில், ஒன்றிய, மாநில அரசுகளின் ஓபிசி சாதிகளின் பட்டியலை வைத்து, அதிலிருந்து மக்கள் சாதிப்பெயரைத் தேர்வு செய்யும் முறையைப் பின்பற்றினால்தான் சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தப்படுவதன் நோக்கம் நிறைவேறும்.

தற்போதைய முறையைத் தொடர்ந்தால், மக்கள்தொகைக் கணக்கெடுப்புக்காகச் செலவிடப்படும் சுமார் 12 ஆயிரம் கோடி ரூபாயும், லட்சக்கணக்கான அரசு ஊழியர்களின் உழைப்பும் வீணடிக்கப்படும். இதனால் எந்தப் பயனும் இல்லை. இது வெறும் கண்துடைப்பு நடவடிக்கையாக அமைந்துவிடும் ஆபத்தைப் புறந்தள்ளக் கூடாது.

பொருத்தமற்ற விளக்கங்களைக் கூறி, ஒரு தவறை நியாயப்படு த்தாமல், குளறுபடிகளுக்கு இடம் தராமல், சாதிவாரிக் கணக்கெடுப்பின் உண்மையான நோக்கம் நிறைவேறுவதற்கான திருத்த நடவடிக்கைகளை உடனடியாக ஒன்றிய அரசு மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்துகிறேன்.

கோடானுகோடி பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் சமூகநீதி உரிமையை உறுதிசெய்து, நீதி வழங்க வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வலியுறுத்துகிறேன்.

தமிழ்நாடு அரசும், தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில், நடப்பு சட்டப்பேரவை கூட்டத் தொடரிலேயே இதற்கான சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றி, உரிய அழுத்தத்தை ஒன்றிய அரசுக்கு வழங்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனத் தெரிவித்துள்ளார்.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

## காட்டுக்கரணை ஊராட்சியில் திரவுபதி அம்மன் அக்னி வசந்த விழா விமரிசை



அச்சிறுபாக்கம் அருகே காட்டுக்கரணை கிராமத்தில் திரவுபதி அம்மன் அக்னி வசந்த மஹாபாரத திருவிழாவில், படுகளம் நிகழ்வு வெகு விமரிசையாக நடந்தது.

காட்டுக்கரணை கிராமத்தில் திரவுபதி அம்மன் கோவில் உள்ளது.

இங்கு, 26 ஆண்டுகளுக்கு பின், கிராம பொதுமக்கள் பங்களிப்புடன், அக்னி வசந்த மஹாபாரத திருவிழா கடந்த மாதம், 17ல் கொடி ஏற்றத்துடன் துவங்கியது.

அன்று முதல், 18 நாட்கள் மஹாபாரத சொற்பொழிவும், கடந்த, 17 நாட்களுக்கு, கீழ் சிவிரி கிராமத்தைச் சேர்ந்த பாரதமாதா நாடக மன்றத்தினரால், இரவில் மஹாபாரததெருக்கூத்து நாடகம் நடந்து வந்தது.

இதில், கிருஷ்ணன் பிறப்பு நாடகம், அம்பாள் திருக்கல்யாணம், பாண்டவர் பிறப்பு, அரக்கு மாளிகை, பக்காசூரனுக்கு சோறு எடுத்தல், வில் வலைப்பு, திரவுபதி அம்மனுக்கு திருக்கல்யாணம்,

சுபத்திரை கல்யாணம், காண்டவன தகனம், சராசந்திரன் சண்டை, துயில், சித்திரசேனன் சண்டை, அரவான் சாபம், அர்சுணன் தபசு மரம் ஏறும் நாடகங்கள் நடந்து வந்தது.

இதன் முக்கிய நிகழ்வான துரியோதனன் படுகளம்நிகழ்ச்சிநேற்று காலை நடந்தது.

கோவில் அருகே, 30 அடி நீள துரியோதனன் உருவ பொம்மையை மண்ணால் செய்து, அதில் பீமனும், துரியோதனனும் சண்டையிட்டு, இறுதியில் பீமன் தன் கதாயுதத்தால், துரியோதனின் தொடையில் அடித்து வதம் செய்யும் நிகழ்ச்சி நடந்தது.

தொடர்ந்து, திரவுபதி அம்மனை துரியோதனன் உடல்மீது வைத்து, சபதம் நிறைவேறும்வகையில், திரவுபதி கூந்தல் முடிக்கும் நிகழ்வும் நடந்தது.

திருநங்கையின் கையால், ஆண்கும், பெண்களும் துடைப்பத்தால் அடிவாங்கி வேண்டுதலை நிறைவேற்றினர்.

நிகழ்ச்சியை, எலப்பாக்கம், காட்டுக்கூடலூர், மதுார், ஆணைக்குன்னம், கோட்டக்கயப்பாக்கம், ராமாபுரம் உள்ளிட்ட கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள், துரியோதனன் படுகளம் நிகழ்ச்சியை கண்டு களித்தனர்.

விழாவுக்கான ஏற்பாடுகளை, கிராம தர்மகர்த்தாக்கள், விழா குழுவினர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

இன்று, காலை தர்மர் பட்டாபிஷேகம் சிறப்பாக நடைபெற உள்ளது.

அச்சிறுபாக்கம் அருகே காட்டுக்கரணை கிராமத்தில் திரவுபதி அம்மன் அக்னி வசந்த மஹாபாரத திருவிழாவில், படுகளம் நிகழ்வு வெகு விமரிசையாக நடந்தது.

## அச்சிறுப்பாக்கம் அருகே பாதிரி கிராமத்தில் அருள்மிகு ஸ்ரீ கெங்கையம்மன் ஆலய மஹா கும்பாபிஷேக விழா



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அச்சிறுப்பாக்கம் அருகே உள்ள பாதிரி கிராமத்தில் உள்ள அருள்மிகு ஸ்ரீ கெங்கையம்மன் ஆலய அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் விழா வெகு விமர்சையா கநடைபெற்றது. 5 ஆம் தேதி காலை விநாயகர் பூஜை, கலச பூஜை, கணபதி மற்றும்நவகிரஹஹோமங்களுடன் கும்பாபிஷேக விழா தொடங்கியது.

இதனைத் தொடர்ந்து இன்று காலை இரண்டாம் கால யாகசாலையுடன் தொடங்கியது இதனைத் தொடர்ந்து மகா பூர்ணாஷீதி செய்யப்பட்டு யாகசாலையில் இருந்து கலசங்கள் ஸ்ரீ கெங்கையம்மன் ஆலயத்திற்கு மேளதாளங்கள் முழங்க எடுத்து செல்லப்பட்டு வேத மந்திரங்கள் முழங்க சிவாச்சாரியார்கள் அம்மன் சிலைக்கு புனித நீர் ஊற்றி மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது இதனைத் தொடர்ந்து ஸ்ரீ கெங்கையம்மனுக்கு புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகம் நடைபெற்றது இந்த கும்பாபிஷேக விழாவில் சுற்றுவட்டார பகுதிகளிலிருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

### கோவை தொண்டாமுத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பேரூர் அருகே

## தமிழக வெற்றிக் கழகம் மேற்கு மகளிரணி சார்பாக கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு நிகழ்ச்சி நடைபெற்றது



கோவை தொண்டாமுத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பேரூர் அருகே தமிழக வெற்றிக் கழகம் மேற்கு மகளிரணி சார்பாக கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் சிறப்பு விருந்தினராக. கோவையில் மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் விக்னேஷ் கலந்து கொண்டார். தொடர்ந்து செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில். புனிதமான தமிழ் மண்ணில் பிறக்கும் குழந்தைகள் , தளபதி ஆட்சியில் வரம் வாங்கி கொண்டு பிறக்கும் குழந்தைகள் இவர்கள். டாஸ்மாக் ஊழியர்கள் முன் அறிவிப்பின்றி கடை அடைத்தவர்கள் மீண்டும் கடை திறக்க ஆரம்பித்து விட்டார்கள். பணிக்கு வராதவர்கள் மீதுசட்டபடிநடவடிக்கை எடுப்போம், பழி வாங்கும் நோக்கம் ஏதும் இல்லை.தப்பு யார் செய்தாலும் தப்பு தான்.அரசு தப்பு செய்தாலும், அமைச்சர் தப்பு செய்தாலும் அதற்கான தண்டனை அனுபவித்து தான் ஆக வேண்டும். இன்றைய டாஸ்மாக் ஊழியர்கள் போராட்டம், ஆர்பாட்டம் காரணமானவர்கள் திமுக - அதிமுக தான். அன்று இவர்கள் பிரச்சனை குறித்து நடவடிக்கை எடுத்து இருந்தால் இவ்வளவு தூரம் வந்து இருக்காது. இது ஒரு உதாரணம் தான். இந்த மாதிரி அனைத்து துறைகளும் உள்ளது. டாஸ்மாக் பிரச்சனை என்பது 200 படிகள் கொண்டது, ஆனால் நான் 70 படிகள் வரை ஏறிவிட்டேன். மீதமுள்ள படிகளை ஏறி விரைந்து நடவடிக்கை எடுப்பேன் என தெரிவித்தார்.

## பணகுடியில் செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனார் 155வது பிறந்தநாள் விழா முன்னாள் சபாநாயகர் அப்பாவு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்




நெல்லை மாவட்டம் பணகுடி பேருந்து நிலையம் முன்பு அலங்கரிக்கப்பட்ட கப்பலோட்டிய தமிழர், செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனாரின் 155-வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு முன்னாள் சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர் இந்நிகழ்ச்சியில் மாவட்ட கவுன்சிலர் மு. பாஸ்கர்.பணகுடி நகர செயலாளர் வி.டி. தமிழ்வாணன்.தமிழ்நாடு வ.உசி இளைஞர் பேரவைத்மாநிலபொருளாளர்பணகுடிசிவகாமி அம்மாள் கோவில் அறங்காவலர் குழு உறுப்பினர் மதிமுக மாவட்ட இளைஞர்அணி அமைப்பாளருமான மு.சங்கர்.திமுக மாவட்ட பிரதிநிதிகள் மு.க. மாணிக்கம்.

பணகுடி சிவகாமி அம்பாள் கோவில் அறங்காவலர் குழு தலைவர் வீ.அசோக் குமார்.பணகுடி பேரூராட்சி மன்ற 1- வது வார்டு கவுன்சிலர்கோபி. கோபால கண்ணன். காவல்கிணறு மதிமுக கட்சி நிர்வாகி லட்சுமணன். மற்றும் வ.உ.சி பேரவை உறுப்பினர்கள். திமு கழக நிர்வாகிகள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

## 'எஸ்ஐஆர் மூலம் மக்கள் தொகையில் 15% பேர் நீக்கம்' முன்னாள் தலைமை தேர்தல் அதிகாரி குற்றச்சாட்டு

"எஸ்ஐஆர் மூலம் நாட்டின் மக்கள் தொகையில் சுமார் 14 முதல் 15 கோடி பேரை தேர்தல் ஆணையம் நீக்கியுள்ளது. இதில் நாட்டின் சட்டத்துக்கு புறம்பாக குடியேறியவர்களில்எத்தனைபேர் நீக்கப்பட்டுள்ளனர் என்ற விவரத்தை தேர்தல் ஆணையம் வெளியிடவில்லை. எஸ்ஐஆர் பணிக்கான அடிப்படை நோக்கம் அதுதான்.

தேசிய மக்கள் தொகை ஆணையம் செய்ய முடியாத ஒருபணியை தேர்தல் ஆணையம் செய்துள்ளது. அதனால் அப்படி நீக்கப்பட்டவ ர்களின் எண்ணிக்கை மற்றும் விவரத்தை தேர்தல் ஆணையம் வெளியிட வேண்டும் என வலியுறுத்துகிறேன். ஏனெனில், மக்கள் தொகை கட்டுப்பாட்டில் முக்கிய பணியை



செய்து உள்ளீர்கள். தேசத்தின் மக்கள் தொகை எண்ணிக்கையில் சுமார் 14 முதல் 15 சதவீதம் பேரை நீக்கியுள்ளது பெரிய சாதனை.

இதன் மூலம் ஜனநாயகத்தை தேர்தல் ஆணையம் டிங்கரிங் செய்துள்ளது. ஒவ்வொரு இந்தியருக்கும் வாக்களிக்கும் உரிமையை அரசியலமைப்பு வழங்குகிறது. இதற்கு தேர்தல் ஆணையத்தின் கருணை தேவையில்லை" என்று அவர் தெரிவித்துள்ளார்.

எஸ்ஐஆர்

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணியை தேர்தல் ஆணையம் கடந்த ஆண்டு தொடங்கியது. பல்வேறு கட்டங்களாக இந்தப் பணி நடைபெறுகிறது. கடந்த ஆண்டு முதல் கட்டமாக பிஹாரில் இந்தப் பணி நடைபெற்றது. தொடர்ந்து இரண்டாவது கட்டமாக தமிழகம், புதுச்சேரி உள்ளிட்ட 9 மாநிலங்கள் மற்றும் 3 யூனியன் பிரதேச ங்களில் கடந்த ஆண்டு இறுதியில் நடைபெற்றது. இதைத்தொடர்ந்து மூன்றாவது கட்டமாக விடுபட்ட மாநிலங்களில் எஸ்ஐஆர் பணி தொடங்கியது.

இந்நிலையில், அண்மையில் மகாராஷ்டிரா மாநிலத்தில் எஸ்ஐஆர் பணிக்கு பின்னர் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. இதில் மொத்தம் உள்ள 9.78 கோடி வாக்காளர்களில் சுமார் 7.71 கோடி பேர் மட்டுமே வாக்காளர் கணக்கெடுப்பு படிவத்தை பூர்த்தி செய்து வழங்கி உள்ளனர் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்தது. இதனை காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடுமையாக எதிர்த்துள்ளன.

## வேலூர் மண்டல முஸ்லிம் மாணவர் அமைப்பு ஆலோசனைக் கூட்டம்; முஸ்லிம் லீக் நிர்வாகிகள் பங்கேற்பு



வேலூர் மண்டல முஸ்லிம் மாணவர் அமைப்பின் ஆலோசனைக் கூட்டம் வேலூரில் நடைபெற்றது. கூட்டத்திற்கு முன்னாள் ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினரும், இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் தேசிய செயலாளருமான பஷீர் அகமது தலைமை தாங்கினார். இக்கூட்டத்தில் வாணியம்பாடி சட்டமன்ற உறுப்பினர் எஸ். எஸ்.பி. ஃபாரூக், திருப்பத்தூர் மாவட்ட கௌரவத் தலைவர் எஸ்.டி. நிஷா, இளைஞரணி மாநில துணைச் செயலாளர் ரஹீம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

மேலும், இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் ராணிப்பேட்டை மாவட்ட இளைஞரணி செயலாளர் முஸ்தபா ஜிலானி உள்ளிட்ட மாவட்ட, நகர மற்றும் மாணவரணி நிர்வாகிகள் பங்கேற்றனர். வேலூர், ராணிப்பேட்டை, ஆம்பூர் மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களைச் சேர்ந்த கட்சியின் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்கள் மற்றும் பல்வேறு அணி நிர்வாகிகளும் கூட்டத்தில் கலந்து கொண்டு அமைப்பின் எதிர்கால செயல்திட்டங்கள் குறித்து ஆலோசனை நடத்தினர்.

கல்வி, சமூக முன்னேற்றம் மற்றும் மாணவர் நலன் தொடர்பான பல்வேறு கருத்துகள் பரிமாறப்பட்டதுடன், மாணவர் அமைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கானதீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

## ராணிப்பேட்டை மாவட்டம்

# ஆற்காடு அருகே மாநில அளவிலான கராத்தே சாம்பியன்ஷிப் போட்டி - 400க்கும் மேற்பட்டோர் பங்கேற்பு



ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு அருகே உள்ள தனியார் திருமண மண்டபத்தில், ஹிட்டோஷி ஷிட்டோ-ரியூ கராத்தே-டோ இந்தியா சங்கம் சார்பில் 2026-ஆம் ஆண்டுக்கான மாநில அளவிலான கராத்தே சாம்பியன்ஷிப் போட்டி நடைபெற்றது.

இதில் மாவட்டம் முழுவதிலும் இருந்து ஜூனியர், சப்-ஜூனியர் மற்றும் சீனியர் என பல்வேறு பிரிவுகளில் ஆண்கள் மற்றும் பெண்கள் என 400-க்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் ஆர்வத்துடன் பங்கேற்றனர். போட்டிக்கு சிறப்பு அழைப்பாளராக பங்கேற்றதனபால் தலைமை வகித்தார். மற்றொரு சிறப்பு அழைப்பாளரான முனிராஜ் முன்னிலை வகித்தார்.

மேலும், முக்கிய சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்ற செண்பகராஜ் மற்றும் கார்த்திகேயன் ஆகியோர், போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகளுக்கு சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை வழங்கி பாராட்டி, ஊக்கப்படுத்தினர்.

இந்த போட்டிகளில் சிறப்பாக செயல்பட்டு வெற்றி பெறும் வீரர், வீராங்கனைகள், அடுத்தகட்டமாக இந்திய அளவில் நடைபெறும் கராத்தே போட்டிகளில் பங்கேற்க தேர்வு செய்யப்படுகின்றனர்.

நிகழ்ச்சியில் சர்வதேச தலைமை நடுவரான மணிவண்ணன் நடுவராக பங்கேற்று போட்டிகளை நடத்தினார்.

நிகழ்ச்சியில் போட்டியாளர்களின் குடும்பத்தினர், பொதுமக்கள் மற்றும் பல்வேறு கராத்தே பயிற்சி பள்ளிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



# தூத்துக்குடியில் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை - சங்க நிர்வாகிகளும் பங்கேற்பு

தூத்துக்குடி: சுதந்திரப் போராட்டத் தியாகியும், செக்கிழுத்த செம்மலுமான கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி தம்பரனாரின் 155-வது பிறந்தநாள் விழா தூத்துக்குடியில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இதையொட்டி, தூத்துக்குடி பழைய மாநகராட்சி அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள வ.உ.சிதம்பரனாரின் முழு திருவுருவச் சிலைக்கு தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக சார்பில், வடக்கு மாவட்டச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான கீதாஜீவன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.


வ.உ.சிதம்பரனாரின் சுதந்திரப் போராட்டத் தியாகத்தையும், ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிராக அவர் மேற்கொண்ட போராட்டங்களையும் நினைவுகூரும் வகையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், திமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திரளாகக் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.

இதை தொடர்ந்து முத்தரையர் கனவா மீன்பிடி நலச்சங்க பொருளாளர் எஸ்.ஆர். சந்தனராஜ் மற்றும் தூத்துக்குடி அண்ணாசங்குகுளி சங்கத் தலைவர் இசக்கிமுத்து உள்ளிட்ட சங்க நிர்வாகிகள் வ.உ.சிதம்பரனார் சிலைக்கு மாலை அணிவித்துமரியாதைசெலுத்தினர்.நிகழ்ச்சியில்தூத்துக்குடி மாநகரச் செயலாளர் ஆனந்தசேகரன், மாநகராட்சி துணை மேயர் ஜெனிட்டா,

முத்தரையர் கனவா மீன்பிடி நலச்சங்கத் தலைவர் முனியசாமி, துணைத்தலைவர் ராஜேந்திரன், செயலாளர் பாலு, துணைச்செயலாளர் ஜெகன், ஒருங்கிணைப்பாளர் வெள்ளைச்சாமி, ஆலோசகர் இசக்கிமுத்து உள்ளிட்ட சங்க நிர்வாகிகளும் மற்றும் கவுன்சிலர்கள், பகுதி செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திரளாகக் கலந்து கொண்டு பங்கேற்று வ.உ.சிதம்பரனாரின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

வ.உ.சிதம்பரனாரின் பிறந்தநாளைமுன்னிட்டு நடைபெற்றஇந்தநிகழ்ச்சியில், அவரது சுதந்திரப் போராட்டப் பங்களிப்பு மற்றும் தியாகத்தை நினைவுகூர்ந்து, அவருக்கு மரியாதை செலுத்தப்பட்டது.

# கோவை எஸ்.எம்.எஸ். ஹெரிடேஜ் பள்ளி திறப்பு குறைந்த கல்விக் கட்டணத்தில் தரமான ஐ.சி.எஸ்.சி. பாடத்திட்டத்தில் சேர்க்கை தொடக்கம்



கோவை நஞ்சுண்டாபுரம் சாலை முருகன் நகர் பகுதியில் எஸ்.எம்.எஸ். ஹெரிடேஜ் பள்ளி திறப்பு விழா நடைபெற்றது. உயிர்த்த இயேசு ஆண்டவர் தேவாலயத்தின் ரெவரண்ட் ஃபாதர் ஆனந்த் குமார் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பள்ளியைத் திறந்து வைத்து வாழ்த்தினார்.

இந்தத் திறப்பு விழாவில் ஆசிரியைகள், பள்ளி மாணவ, மாணவிகள், பெற்றோர்கள் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மாணவ, மாணவிகளுக்குக் கற்பிக்கப்படும் பாடத்திட்டங்கள், நவீன காலத்திற்கு ஏற்ப எஸ்.எம்.எஸ். பள்ளி முதல்வர் திவ்ய பிரியா தலைமையில் ஆசியர்கள் குழுவால் தயாரிக்கப்பட்ட பாடப் புத்தகங்கள், நவீன முறையில் கற்பித்தல் உள்ளிட்டவை குறித்து விளக்கப்பட்டது. தேசிய வனவிலங்கு தினத்தை முன்னிட்டு, வனவிலங்குகளின் பாதுகாப்பு மற்றும் பாரம்பரிய வாழ்வியல் முறைகளைப் பாதுகாப்பதன் அவசியம் குறித்த கண்காட்சியும் நடைபெற்றது. இது குறித்து எஸ்.எம்.எஸ். ஹெரிடேஜ் பள்ளியின் முதல்வர் திவ்ய பிரியா பேசுகையில், 2024ஆம் ஆண்டு எஸ்.எம்.எஸ்.கிட்ஸ்ஷோன் பள்ளி நடத்தி வருவதாகவும், அதிலே மழலையர் பருவம், ப்ரீகேஜி, எல்.கேஜி., யு.கேஜி. வகுப்புகள் நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

தற்போது எஸ்.எம்.எஸ். ஹெரிடேஜ் பள்ளி என்ற புதிய பள்ளியை தொடங்கியுள்ளதாகவும், விஜயதசமியை முன்னிட்டு சிறப்புப் பள்ளிசேர்க்கைநடைபெற உள்ளதாகவும் திவ்ய பிரியா தெரிவித்தார். 1 ஆம் வகுப்பு முதல், 5 ஆம் வகுப்பு வரையிலும் குறைந்த கட்டணத்தில் ஐ.சி. எஸ்.சி. பாடத்திட்டத்தில் கல்வி கற்பிக்க இருப்பதாகவும், மாணவ, மாணவிகளுக்குத் தரமான கல்வியை வழங்கி, சிறந்த மாணாக்கர்களைச் சமூகத்திற்கு உருவாக்குவதே தங்களது நோக்கம் என்றும் தெரிவித்தார். சிறந்த மாணாக்கர்களைத் தயார்படுத்துவதே தங்களது கடமை என்றும் கூறிய பள்ளியின் முதல்வர்திவ்யபிரியா, பள்ளியின்விவரங்கள் குறித்து எஸ்.எம்.எஸ். ஹெரிடேஜ் பள்ளியின் சமூக வலைதளப் பக்கங்களில் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம்

# கோவையில் நமது குளம், நமது பொறுப்பு, நமது பெருமை எனும் தலைப்பில், கோவை குறிச்சி குளத்தை அள்ளித் தூய்மைப்படுத்திய 'வீ தி லீடர்ஸ்' தன்னார்வலர்கள்

## சுற்றுச்சூழல் காக்கக் களமிறங்கிய அண்ணாமலையின் இயக்கத்தினர்! குவிந்த பொதுமக்கள் பாராட்டு!

"நமது குளம், நமது பொறுப்பு, நமது பெருமை"என்றமுழக்கத்துடன், கோவை குறிச்சி குளத்தில்'வீ தி லீடர்ஸ்' அமைப்பின் தன்னார்வலர்கள் இன்று காலை முதல் தீவிரத் தூய்மைப் பணியில் ஈடுபட்டு, பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் ஆகாயத் தாமரைகளை அகற்றினர்.



கோவை மாநகரின் முக்கிய நீர் நிலைகளில் ஒன்றான குறிச்சி குளத்தைப் பாதுகாக்கவும், நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தும் வகையிலும் இந்தத் தூய்மைப் பணி முன்னெடுக்கப்பட்டது. 'வீ தி லீடர்ஸ்' அமைப்பின் தூய்மை இயக்கத்தின் கீழ் நடைபெற்ற இந்நிகழ்வில், கோவையின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த இளைஞர்கள், மாணவர்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

இன்று காலை முதலே குளத்தின் கரைப் பகுதிகள் மற்றும் நீர் தேங்கும் இடங்களில் தேங்கிக் கிடந்த பிளாஸ்டிக் பாட்டில்கள், கழிவுப் பொருட்கள், பிளாஸ்டிக் பைகள் மற்றும் ஆகாயத் தாமரைகளைச்சேகரித்துஅகற்றும் பணியில் தன்னார்வலர்கள் தீவிரமாகஈடுபட்டனர்.

நமது நீர் நிலைகளைப் பாதுகாப்பது நமது கடமை என

இத்தூய்மைப் பணியில்ஆர்வத்துடன்பங்கேற்ற நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் விஜயகுமார் கூறியதாவது..

இயற்கை வளம் நிறைந்த கோவையின் நீர் நிலைகளைப் பேணிப் பாதுகாப்பது நம் ஒவ்வொருவரின் தலையாயக் கடமையாகும். 'நமது குளம், நமது பொறுப்பு, நமது பெருமை' என்ற நோக்கில் இந்த முயற்சியை எடுத்து உள்ளோம். அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளை மட்டுமே எதிர்பார்த்துக் கொண்டு இருக்காமல், சமூகப் பொறுப்போடு இளைஞர்கள் களத்திற்கு வரும் போது தான் மாற்றங்கள் சாத்தியமாகும்.

பொதுமக்கள் நீர் நிலைகளில் குப்பைகளையோ ? பிளாஸ்டிக் கழிவுகளையோ ? கொட்டுவதைத் தவிர்க்க வேண்டும். நமது எதிர்காலச் சந்ததியினருக்குத் தூய்மையான சுற்றுச்சூழலை விட்டுச் செல்வதே நாம் செய்யும் மிகப்பெரிய நன்மையாகும்" எனத் தெரிவித்தனர்.

இளைஞர்களும் தன்னார்வலர்களும் ஒன்றிணைந்து காலை முதலே குறிச்சி குளத்தைச் சீரமைத்துத் தூய்மைப்படுத்திய இந்த முயற்சியைப் பார்த்த அப்பகுதி மக்களும், நடைப்பயிற்சி மேற்கொள்பவர்களும் 'வீ தி லீடர்ஸ்' அமைப்பினருக்குத் தங்களது மனமார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்தனர்.

# கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி 155வது பிறந்தநாளை முன்னிட்டு தூத்துக்குடி மாநகர் மாவட்ட காங்கிரஸ் சார்பில் மரியாதை!



சுதந்திரப்போராட்டத் தியாகியும், "செக்கிழுத்த செம்மல்" எனப்போற்றப்படுபவருமான கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாரின் 155-வது பிறந்தநாள் விழா தூத்துக்குடியில் சிறப்பாக அனுசரிக்கப்பட்டது.

இதையொட்டி, தூத்துக்குடி பழைய மாநகராட்சி அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள வ.உ.சிதம்பரனாரின் முழு திருவுருவச் சிலைக்கு, தூத்துக்குடி மாநகர் மாவட்ட காங்கிரஸ் சார்பில் மாவட்டத் தலைவர் எஸ்.எம். சகாயராஜ் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மண்டலத்தலைவர்கள் சேகர், ஐசன் சில்வா, நிர்மல் கிறிஸ்டோபர், ஜான் சாமுவேல், சிறுபான்மை மாவட்டத் தலைவர் மைதீன், மாவட்ட பொதுச் செயலாளர்கள் கோபால், மைக்கேல் பிரபாகர், புல்டன் ஜெஸின், மில்லை தேவராஜ், வழக்கறிஞர் சகாயராஜ், மாவட்ட துணைத் தலைவர்கள் பாலகிருஷ்ணன், ரஞ்சிதம் ஜெபராஜ், நாகேந்திரன், தனசேகரன், சுரேஷ், ராஜாராம் உள்ளிட்ட காங்கிரஸ் நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டு வ.உ.சிதம்பரனாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

# ஈரோடு வணிகர்களின் வளர்ச்சிக்கு புதிய பாதை

## 12 முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றம் ரிங் ரோடு முதல் உணவுத்தொழில் பூங்கா வரை - வணிகர்களின் எதிர்பார்ப்புகளுக்கு அரசு செவிசாய்க்குமா?



ஈரோடு மாவட்டத்தின் வணிகம் மற்றும் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதுடன், வணிகர்கள் மற்றும் பொதுமக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு - ஈரோடு மாவட்டம் சார்பில் 12 முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

ஈரோடு வீரபத்ர 3வது வீதியில், ரத்னா ரெசிடென்சி எதிரில் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட தலைமை அலுவலக திறப்பு விழா 06.09.2026 ஞாயிற்றுக்கிழமை நேற்று நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து நடைபெற்ற கலந்தாய்வில், ஈரோடு மாவட்டத்தின் எதிர்கால வணிகம், தொழில், போக்குவரத்து மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சி தொடர்பான பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட்டு, முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

விழாவிற்கு மாவட்ட தலைவர் இரா.க. சண்முகவேல் தலைமை வகித்தார்.மாவட்டசெயலாளர் வேலா ப.சா. சுந்தரராஜன் வரவேற்புரையாற்றினார். மாவட்ட பொருளாளர் உதயம் பொ. செல்வம் நன்றியுரை வழங்கினார்.

மாவட்ட தலைமை அலுவலகத்தை மாநில தலைவர் A.M. விக்கிரமராஜா திறந்து வைத்தார். கூட்ட அரங்கத்தை மாநில கூடுதல் செயலாளர் S. ராஜசேகரன் திறந்து வைத்தார். கலந்தாய்வு அரங்கத்தை மாநில துணைத் தலைவர் ப.திருமூர்த்தி திறந்து வைத்தார்.

விழாவில் மாநில இணைச் செயலாளர் பொ. இராமச்சந்திரன், கோவைமண்டலஇளைஞரணி ஒருங்கிணைப்பாளர் SKM. பாலகிருஷ்ணன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் அ. லாரன்ஸ் ரமேஷ்,மாவட்ட செய்தித் தொடர்பாளர் A.R. சாதிக் பாட்சா உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் வணிகர் சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

நிறைவேற்றப்பட்ட 12 முக்கிய தீர்மானங்கள்

1. முடங்கிய அரசு வணிகக் கட்டிடங்கள் பயன்பாட்டிற்கு வர வேண்டும்!

ஈரோடு மாநகராட்சி மற்றும் மாவட்ட நகராட்சிகளுக்குச் சொந்தமான பல புதிய வணிகக் கட்டிடங்கள், பல நூறு கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டும் மூன்றாண்டுகளுக்கும் மேலாக பயன்பாடின்றி உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. வணிகர்களின் தற்போதைய பொருளாதார நிலையை கருத்தில் கொண்டு வைப்புத்தொகை மற்றும் வாடகையை குறைத்து,அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி கட்டிடங்களை பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் எனதீர்மானிக்கப்பட்டது.

2. ஈரோடு–கோபி மார்க்கெட்டுகள் தற்போதைய இடங்களிலேயே தொடர வேண்டும்!

ஈரோடுமற்றும்கோபியில் செயல்பட்டு வரும் காய்கறி மற்றும் பழ மார்க்கெட்டுகளை வணிகர்கள், பொதுமக்களின் நலன் கருதி தற்போது இயங்கி வரும் இடங்களிலேயே நிரந்தரமாக செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

3. சைபர் கிரைம் விவகாரங்களில் நேர்மையான வணிகர்களுக்கு பாதுகாப்பு!

தனிநபர்களின் சைபர் குற்றப் பரிவர்த்தனைகளுக்காக தொழில் மற்றும் வணிக நிறுவனங்களை பொறுப்பேற்கச் செய்யக்கூடாது என்றும், தேவையான விளக்கங்களை காவல்துறை கண்ணியமான முறையில் பெற்று நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

4. திண்டல்–கருங்கல்பாளையம் ரிங் ரோடு அமைக்க வேண்டும்!

ஈரோடு மாநகரின் அதிகரித்து வரும் போக்குவரத்து நெரிசலுக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில், திண்டல் முதல் கருங்கல்பாளையம் வரை முழுமையான சுற்றுச்சாலை அமைக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

5. நகரைச் சுற்றி மேம்பாலங்கள் மற்றும் சுற்றுப்பாதை தேவை!

கருங்கல்பாளையம் ஆற்றுப்பாலம் முதல் திண்டல், மூலப்பாளையம், ஆர். என்.புதூர் உள்ளிட்ட பகுதிகளை இணைக்கும் வகையில், ஈரோடு நகரைச் சுற்றி வாகனங்கள் தடையின்றி செல்லும் வகையில் மேம்பாலங்கள்மற்றும்சுற்றுப்பாதை திட்டங்களை உருவாக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

6. ஈரோட்டில் உணவுப் பகுப்பாய்வுக்கூடம் அமைக்க வேண்டும்!

ஈரோட்டின் உணவுப் பொருள் வணிகம் மற்றும் தொழில் வளர்ச்சியைகருத்தில்கொண்டு, நவீன வசதிகளுடன் கூடிய உணவுப் பகுப்பாய்வுக்கூடம் நகரில் அமைக்கவேண்டும்என தீர்மானிக்கப்பட்டது.

7. சோலார் உள்ளிட்ட புறநகரில் விளையாட்டு-பொழுதுபோக்கு மையங்கள்!

ஈரோடு நகர மக்களுக்கான பொழுதுபோக்கு மற்றும் விளையாட்டு வசதிகளை அதிகரிக்கும் வகையில், சோலார் உள்ளிட்ட புறநகர் பகுதிகளில் நவீன விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு அரங்கங்களை அமைக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

8. லாரி புக்கிங் அலுவலகங்களை புறநகருக்கு மாற்ற வேண்டும்!

மாநகரின் மையப்பகுதியில் போக்குவரத்துக்கு இடையூறாக இயங்கி வரும் லாரி புக்கிங் அலுவலகங்களை, சோலார் பேருந்து நிலையம் அருகிலுள்ள பகுதிக்கு மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

9.வாரச் சந்தைகளுக்கு முறையான ஒழுங்குமுறை வேண்டும்!

நிரந்தர வணிக நிறுவனங்கள் அமைந்துள்ள முக்கிய பகுதிகளில் அவற்றின் வணிகத்தை நேரடியாக பாதிக்கும் வகையில் வாரச் சந்தைகள் அமைப்பதை தவிர்க்க வேண்டும். அனுமதியின்றி அல்லது விதிமுறைகளை மீறி செயல்படும் சாலையோர வாரச் சந்தைகள் மீது உள்ளாட்சி அமைப்புகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

10. தெருவோர வணிகர்களிடம் தனிநபர் சுங்க வசூலுக்கு முற்றுப்புள்ளி!

ஈரோடு மாநகரம் முழுவதும் தெருவோர வணிகர்களிடம் தனிநபர்கள் சுங்கம் வசூலிப்பதை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

11.சொத்து வரி,குப்பை வரியை மறுபரிசீலனை செய்ய வேண்டும்!

வணிக நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள், வீடுகள் மற்றும் வணிக வளாகங்களுக்கு உயர்த்தப்பட்டுள்ள சொத்து வரி மற்றும் குப்பை வரியால் ஏற்பட்டுள்ள நிதிச்சுமையை கருத்தில் கொண்டு, வரி விதிப்பைமறுபரிசீலனை செய்து சுமையை குறைக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

12. தடையற்ற மின்சாரம் - ஒருங்கிணைந்த உணவுத்தொழில்பூங்கா!

மாதாந்திர மின் விநியோக நிறுத்தத்தால் வணிகம் மற்றும் தொழில் நிறுவனங்கள் பாதிக்கப்படுவதைத் தவிர்க்க,ஈரோடு மாவட்டத்தில் தேவையான அளவில் புதிய மின் துணை நிலையங்களை அமைக்க வேண்டும்.

மேலும், விவசாயம் மற்றும் உணவுப் பொருட்கள் சார்ந்த பதப்படுத்தும் சிறுதொழில்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், ஈரோடு மாவட்டத்தில் ஒருங்கிணைந்த உணவுத் தொழில்பூங்கா அமைக்க வேண்டும் என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தீர்மானங்கள்... இனி செயல்படுத்தப்படுமா?

ஈரோடு மாவட்டத்தின் தொழில் மற்றும் வணிக வளர்ச்சியுடன் பொதுமக்களின் நலனும் பின்னிப் பிணைந்துள்ள நிலையில், நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்கள் அனைத்தையும் அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று, சம்பந்தப்பட்ட துறைகள் மூலம் நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வணிகர் சங்க நிர்வாகிகள் வலியுறுத்தினர்.

புதிய மாவட்ட தலைமை அலுவலகம் திறக்கப்பட்டுள்ள நிலையில், ஈரோடு மாவட்ட வணிகர்களின் பிரச்சினைகளுக்கு குரல் கொடுப்பதோடு மட்டுமின்றி, நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை செயல்பாட்டிற்கு கொண்டு வருவதற்கும் பேரமைப்பு தொடர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே வணிகர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.





## ஈரோட்டில் V2 இன்ஃப்ரா அண்ட் இன்டீரியர்ஸ் புதிய அலுவலக திறப்பு விழா

ஈரோடு மாநகர் SKC சாலையில் அமைந்துள்ள V2 இன்ஃப்ரா அண்ட் இன்டீரியர்ஸ் நிறுவனத்தின் புதிய அலுவலக திறப்பு விழா இன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சரும் சட்டமன்றஉறுப்பினருமான S.P.வேலுமணி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு புதிய அலுவலகத்தைத்திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில் ஈரோடு மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் R.மனோகரன், முன்னாள் துணை மேயரும் கழக கொள்கை பரப்புத் துணைச் செயலாளருமான K.C.பழனிசாமி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட வழக்கறிஞர் பிரிவுச் செயலாளருமான S.செல்வகுமார சின்னயன், முன்னாள் மேயரும் மாவட்ட மகளிரணிச் செயலாளருமான மல்லிகா பரமசிவம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் மாவட்ட எம்.ஜி.ஆர். மன்றச் செயலாளருமான K.S.தென்னரசு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மேலும், சண்முகா குழுமத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் V.ராஜமாணிக்கம், ஈரோடு சத்யோதயம் அறக்கட்டளை நிறுவனர் மாஸ்டர் ஸ்ரீ ஜி,SSS மருத்துவமனை மருத்துவ இயக்குநர் Dr.பி.செல்வகுமார், சென்னை D5 டிசைன் ஃபேக்டரி இயக்குநர் D.சிவபாரதி ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்துகொண்டனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை நிறுவனத்தின் நிர்வாகப் பங்குதாரர் A.M.சிவபிரசாந்த் மற்றும் திட்டச் செயலாக்கப் பங்குதாரர் V.தியாகராஜன் ஆகியோர் செய்திருந்தனர். இவ்விழாவில் திரளான வணிகப் பிரமுகர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டு வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

## தூத்துக்குடி 51வது வார்டு முடுக்குகாடு கிராம மக்களின் அடிப்படை வசதிகள் கோரிய மனுவை நேரில் பெற்றுக்கொண்டு நிறைவேற்றுவதாக அமைச்சர் ஸ்ரீநாத் உறுதி



தூத்துக்குடி உப்பள பாலம் அருகில் உள்ள முடுக்குக்காடு 51-வது வார்டு கிராமத்தில் பல ஆண்டுகளாக நிறைவேற்றப்படாமல் உள்ள அடிப்படை வசதிகளைக் கோரி பொதுமக்கள் அளித்த மனுவை, மீன்வளத்துறை அமைச்சர் ஸ்ரீநாத் நேரில் பெற்றுக்கொண்டு அனைத்து கோரிக்கைகளையும் நிறைவேற்றுவதாக உறுதியளித்தார்.

தூத்துக்குடி மாநகராட்சிக்கு உட்பட்ட முடுக்குக்காடு கிராமத்தில் கிழக்குப் பகுதியில் உள்ள 4 தெருக்களில் மக்கள் 25 ஆண்டுகளுக்கும் மேலாக வசித்து வருகின்றனர். கிராம மக்கள், தங்களது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றக் கோரி தொடர்ந்து வலியுறுத்தி வந்தநிலையில், கடந்த 6 மாதங்களுக்கு முன்பு தார்ச்சாலை அமைக்கும் பணி தொடங்கப்பட்டது. ஆனால், பாதி தெருக்களுக்கு மட்டுமே தார்ச்சாலை போடப்பட்டுள்ளதால், மீதமுள்ள தெருக்களுக்கும் விரைந்து தார்ச்சாலை அமைத்துத் தர வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும், கிராமத்தின் மையப் பகுதியிலிருந்து உப்பளத்தின் நடுவே திருச்செந்தூர் செல்லும் சாலையை இணைக்கும் மண்சாலை சமீபத்தில் தார்ச்சாலையாக மாற்றப்பட்டது. ஆனால், இந்த சாலையில் தெருவிளக்குகள் அமைக்கப்படாததால் சமூக விரோதிகள் மது அருந்தும் இடமாக மாறியுள்ளது. இதனால் பெண்கள் இச்சாலையை பயன்படுத்த அச்சநிலை நிலவுவதால், உடனடியாக தெருவிளக்குகள் அமைக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினர். மேலும், கிராமத்தில் சுபநிகழ்ச்சிகள், மருத்துவ முகாம்கள் நடத்த அரசு சார்பில் சமுதாய நலக்கூடம் இல்லை. இது குறித்து கடந்த 21.10.2024 அன்று தாட்கோ மூலமாக அரசுக்கு தெரிவிக்கப்பட்டும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, விரைந்து சமுதாய நலக்கூடம் கட்டித் தர வேண்டும் எனவும் கிராம மக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

இந்த நிலையில், தமிழக வெற்றிக் கழகத்தின் தூத்துக்குடி மாவட்ட செயலாளரும், மீன்வளத்துறை அமைச்சருமான ஸ்ரீநாத் முடுக்குக்காடு 51-வது வார்டு கிராமத்திற்கு நேரில் சென்று பொதுமக்களைச் சந்தித்தார். அப்போது, மேற்கண்ட விடுபட்ட சாலைப் பணிகள், தெருவிளக்கு வசதி மற்றும் சமுதாய நலக்கூடம் ஆகிய கோரிக்கைகள் அடங்கிய மனுவை பொதுமக்கள் அவரிடம் அளித்தனர். இந்த நிகழ்வின் போது, தமிழக வெற்றிக் கழகத்தின் 51-வது வார்டு கவுன்சிலர் மந்திரமூர்த்தி, அமைச்சர் ஸ்ரீநாத்திற்கு சால்வை அணிவித்து, பூங்கொத்து கொடுத்து சிறப்பான வரவேற்பு அளித்தார்.

பொதுமக்களின் மனுவைப் பெற்றுக் கொண்ட அமைச்சர் ஸ்ரீநாத், மக்களின் நிலைமையைக் கேட்டறிந்ததுடன், கிராம மக்களின் அடிப்படைத் தேவையான இந்த அனைத்து கோரிக்கைகளையும் உடனடியாக நிறைவேற்றித் தருவதாக நேரில் உறுதி அளித்துச் சென்றார். அமைச்சரின் இந்த நேரடி உத்தரவாதத்தால், தங்களின் நீண்டகாலப் பிரச்சனைகளுக்கு விரைவில் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் முடுக்குக்காடு கிராம மக்கள் உள்ளனர்.

## ‘Most students would be inside’: Locals after boys’ PG collapses in Delhi's Satya Niketan



A rescue operation is underway after a building, believed to be a boys' PG, collapsed in south Delhi's Satya Niketan area on Sunday. Several people are feared trapped beneath the debris, with locals saying that students are trapped inside the collapsed building. A preliminary inquiry suggests that around 40–50 people may have been inside the building when it collapsed, a police official at the spot told HT. Follow live updates here.

Three people are reported to be injured so far. In a statement, AIIMS Delhi sources said that three patients have been admitted to the trauma centre following the building collapse. All three are in critical condition.

Delhi building collapse: Rescue ops underway

Emergency teams reached the site after the collapse and began work to determine how many people may be trapped and to assess the damage caused by the incident.

Delhi chief minister Rekha Gupta said she was "deeply concerned" by the incident and said rescue teams were working "on a war footing".

She said teams from the Delhi Disaster Management Authority (DDMA), the National Disaster Response Force (NDRF), the Delhi Fire Services, the Delhi Police, the Municipal Corporation of Delhi (MCD), the Centralised Accident and Trauma Services (CATS), and the Civil Defence are involved in the rescue operation. She added that the building next to the collapsed structure was evacuated as a precaution. Police said the exact number of people who may be trapped or injured is not known at present.

Locals and witnesses also joined the rescue operation, using their hands and whatever equipment was available to clear the debris and look for people who may be trapped underneath, visuals from the site showed.

Witness accounts of Delhi building collapse

According to locals, the collapsed building was a boys' PG. An eyewitness told news agency ANI that the building was called 'Hostel Daze' and was a dedicated boys' PG. However, there is no official confirmation of this so far. "The adjacent building also collapsed... All the students who were inside their rooms got trapped under the rubble," the eyewitness said, adding that rescue operations are underway.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.